**சார்பு நீதிமன்றம், சீர்காழி.**

**அசல் வழக்கு எண். 255/2023**

பெயர் : மகேஷ் (PW1) (Cross )

த/க/பெ. :

தேதி :09.07.2025

சாட்சி நீதிமன்றம் ஆஜராகி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

தாவா சொத்து 18 அயிட்டம். 3 அயிட்டம் காரைமேடு, 4 அயிட்டம் ராதாநல்லூர் மீதமுள்ளசொத்து செம்பதனிருப்பு. ஒவ்வொரு அயிட்ட சொத்தின் விஸ்தீரணம், நான்கெல்லை தெரியாது. நான் மயிலாடுதுறை சீனிவாசபுரத்தில வசிக்கிறேன். என் அண்ணன் சட்டநாதபுரத்தில் வசிக்கிறார். 3 வது வாதி பாண்டிச்சேரியில் வசிக்கிறார். 4 ம் வாதி குத்தாலம் தாலுக்கா ஷெண்பகச்சேரியில் வசிக்கிறார். வாதிகளாகிய நாங்கள் வெளியிடங்களில் வசித்துக் கொண்டு என் பிரமாண வாக்குமூலத்தில் தவறான முகவரி கொடுதுள்ளேன் என்றால் வழக்குபோடும் போது அங்கு தான் வசித்தோம். என் பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள முகவரி சொத்து அல்லி விளாகம் 417 மெயின்ரோடு 1 முதல் 6 பிரதிவாதிகளின் தந்தை கஞ்சமலையின் தனிப்பட்ட சொத்து என்றால் தெரியாது. என் தந்தை காலத்தில் இருந்து 50 ஆண்டுகளாக அங்கு வசிக்கிறோம். நாங்கள் அங்கு வசிக்கவிலை என்றாலும் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. நாராயணசாமி என்பவருக்கு வீராசாமி, சுப்பு, திருவெங்கடம், சொக்கலிங்கம், ஆறுமுகம் வாரிசுகள் என்றால் சரிதான். 1947 ல் நாராயணசாமி மற்றும் அவரது மகன்கள் மற்றும் இதர நபர்கள் பதிவு செய்யப்பட்ட பாக பிரிவினை ஆவணம் ஏற்படுத்தி கொண்டார்கள் என்றால் சரிதான். சுப்பு என்பவருக்கு கஞ்சமலை, கோவிந்தசாமி, அறங்கசாமி வாரிசுகள் என்றால் சரிதான். கஞ்சமலையின் வாரிசுகள் 1 முதல் 6 பிரதிவாதிகள். கோவிந்தராசுக்கு வாரிசு மனைவி விசாலம் அவர்கள் இருவரும் இறந்துவிட்டார்கள். அரங்கசாமியின் வாரிசுகள் வாதிகள். விசாலம் 1 ம் பிரதிவாதிக்கு உயில் எழுதி வைத்துள்ளார் என்றால் அதன் விபரம் எனக்கு தெரியாது. வாதிகள், பிரதிவாதிகள், விசாலம் பாக பிரிவினை வழக்கு 182/2023 தாக்கல் செய்தார்கள் என்றால் சரிதான். சுப்பு மகன்கள் அவரவர் வருமானத்தை கொண்டு தன்னிப்பட்ட முறையில் சொத்து வாங்கி அவர்களுக்கு உரிமையாக உள்ளது என்றால் சரிதான். கஞ்சமலை நீண்டகாலமாக அனுபவத்து

வந்தால் அவர் பெயரில் யூடிஆர் பட்டா வழங்கப்பட்டது என்றால் 5 மகன்கள் குடுப்த்திலும் தலை பிள்ளை மீது பட்டா வழங்கப்ட்டது. கஞ்சமலை பெயரில் பட்டா வாங்கப்பட்டது செல்லதக்கதல்ல என்றால் சரியல்ல. பட்டாவை ரத்து செய்ய கோரி கோட்டாட்சியரிடம் மேல் முறையிடு செய்துள்ளேனா என்றால் இனிமேல் தான் செய்யவேண்டும். வருவாய் துறையில் எவ்வித மேல் நடிவடிக்கையும் எடுக்கவில்லை. டிஆர்ஓ விடம் மேல் முறையிடு செய்தேனாஎன்றால் இல்லை. மனு நகலை அவர்களுக்கு அனுப்பினேன். லெண்ட் கமிஷ்னரிடம் மனு எதுவும் தாக்கல் செய்யவில்லை. பட்டா பாஸ்புக் சட்டம் பிரிவு 14 ன் படி உரிமையில் நீதிமன்றத்தில் வழக்கு தொடர இயலாது என்றால் சரியல்ல. தாவா சொத்தில் எனக்கு உரிமை உள்ளது என்று விளம்புகை பரிகாரம் கேட்கவில்லை. தாவா சொத்தில் எவ்வித முதன்மை பரிகாரமும் கேட்காமல் துணை பரிகாரம் கேட்க இயலாது என்றால் சரியல்ல. பிரதிவாதிகளின் எதிர்வழக்குரையை படித்து பார்த்தேன். முதன்மை பரிகாரமும் கேட்காமல் துணை பரிகாரம் கேட்க இயலாது என்பது குறித்து எனது வழக்கறிஞரிடம் கேட்டு தெரிந்து கொள்ளவில்லை.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**